දුරකථන ) 011 2669192, 011 2675011
தொலைபேசி ) 011 2698507, 011 2694033
Telephone ) 011 2675449, 011 2675280

ෆැක්ස් ) 011 2693866
பெக்ஸ் ) 011 2693869
Fax ) 011 2692913

විද්‍යුත් තැපෑල )
மின்னஞ்சல் முகவரி) postmaster@health.gov.lk
e-mail )

වෙබ් අඩවිය )
இணையத்தளம் ) www.health.gov.lk
website )

සුවසිරිපාය
சுவசிரிபாய
SUWASIRIPAYA

මගේ අංකය )
எனது இல )
My No. ) HPJ/06/2019

ඔබේ අංකය )
உமது இல )
Your No. )

දිනය )
திகதி )
Date ) 2024.06.10

(57)

# සෞඛ්‍ය අමාත්‍යාංශය
# சுகாதார அமைச்சு
# Ministry of Health

பொது சுற்றறிக்கை இலக்கம்: 01-21/2024

சகல மேலதிக செயலாளர்கள்
சகல பிரதி பணிப்பாளர் நாயகங்கள்
சகல விஷேட திட்டங்களின் தலைவர்கள்
சகல சுகாதார சேவை நிறுவனங்கள்/ வைத்தியசாலைகளின் தலைவர்கள்
சகல மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள்
சகல பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள்

**பண்டாரவளை பிராந்திய வைத்தியசாலை, ஆதார வைத்தியசாலையாக தரமுயர்த்தி தியத்தலாவ ஆதார வைத்தியசாலையுடன் இணைந்து தரமான சுகாதார சேவைகளை மேற்கொள்ளல்**

ஊவா மாகாண சுகாதார அமைச்சினால் நிர்வகிக்கப்படும் பதுளை மாவட்டத்தில் அமைந்துள்ள பண்டாரவளை பிராந்திய வைத்தியசாலையின் ஊடாக வழங்கப்படும் சுகாதார சேவைகளுக்கான அதிகரித்து வரும் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் அந்த வைத்தியசாலையின் வசதிகளை மேம்படுத்துவது நீண்டகால தேவையாக இருந்தது.

02. அதன்படி, தியத்தலாவை ஆதார வைத்தியசாலையில் நிறுவுவதற்கு உத்தேசிக்கப்பட்ட ஆனாலும், மட்டுப்படுத்தப்பட்ட இடவசதி காரணமாக அங்கு நிறுவ முடியாமல் உள்ள கண் சிகிச்சைப் பிரிவு, தோல்நோய் பிரிவு, தொண்டை- காது - மூக்கு தொடர்பான சிகிச்சைப் பிரிவு (மயக்க மருத்துவ சேவை கிடைக்கப்பெறுவதன் அடிப்படையில்) மற்றும் மனநலப் பிரிவு போன்றவற்றின் சேவைகள் பண்டாரவளை பிராந்திய வைத்தியசாலை வளாகத்தில் நிறுவுவதற்கு முன்மொழியப்பட்டது. மேலும், உடல் மற்றும் சிறுவர் நோய் விஷேட பிரிவு ஆகிய இரு பிரிவுகளும் இந்த வைத்தியசாலையில் நிறுவப்படும்.

03. பிரதேச மக்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகளின் சுகாதாரத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக, பண்டாரவளை பிராந்திய வைத்தியசாலை மற்றும் தியத்தலாவை ஆதார வைத்தியசாலைகளை இணைத்து சேவைகளை மேற்கொள்வதற்கு ஊவா மாகாண சபையும் சுகாதார அமைச்சும் தீர்மானித்துள்ளன. அதன்படி, பண்டாரவளை பிராந்திய வைத்தியசாலை, ஆதார வைத்தியசாலையாக தரமுயர்த்தப்பட்டு தியத்தலாவை ஆதார வைத்தியசாலையுடன் இணைந்து தரமான சுகாதார சேவைகளை பராமரிப்பதற்காக அந்த வைத்தியசாலைக்கு தியத்தலாவை/ பண்டாரவளை ஆதார வைத்தியசாலை என பெயரிட்டு, அதன் நிர்வாகம் வைத்திய அத்தியட்சகர் மற்றும் பிரதி வைத்திய அத்தியட்சகரின் கீழ் மேற்கொள்வதற்கு ஊவா மாகாண சுகாதார அமைச்சினால் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இதன்மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த முன்மொழியப்பட்ட நிறுவனம் பற்றிய ஏனைய தகவல்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| 1. | நிறுவனத்தின் பெயர் : | ஆதார வைத்தியசாலை (A வகை) - தியத்தலாவை / பண்டாரவளை |
| 2. | நிருவாக மாவட்டம் : | பதுளை |
| 3. | தேர்தல் பிரிவு : | பண்டாரவளை |
| 4. | பிரதேச செயலாளர் பிரிவு : | பண்டாரவளை |
| 5. | கிட்டிய நிர்வாக அலுவலகம் : | பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் - பதுளை |
| 6. | பொறுப்பதிகாரி : | வைத்திய அத்தியட்சகர் / பிரதி வைத்திய அத்தியட்சகர |
| 7. | அறிக்கையிடும் அதிகாரி : | பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் - பதுளை |
| 8. | தபால் மற்றும் தந்தி அலுவலகம்: | பண்டாரவளை |
| 9. | அண்மித்த புகையிரத நிலையம் : | பண்டாரவளை |
| 10. | பொலிஸ் நிலையம் : | பண்டாரவளை |

வைத்தியர் பீ.ஜீ மஹீபால
**செயலாளர்**

Dr. P. G. Mahipala
Secretary
Ministry of Health
"Suwasiripaya"
385, Rev. Baddegama Wimalawansa Thero Mawatha,
Colombo 10. Sri Lanka.

**பிரதிகள் :**

01. கௌரவ ஆளுநர் - ஊவா மாகாணம்
02. தலைமைச் செயலாளர் - ஊவா மாகாணம்
03. மாகாண சுகாதார செயலாளர்
04. சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம்
05. பிரதான நிதி அலுவலர் I/ II/ III – சுகாதார அமைச்சு
06. பிரதான சட்ட அலுவலர் - சுகாதார அமைச்சு
07. வைத்திய அத்தியட்சகர்/ பிரதி வைத்திய அத்தியட்சகர் - ஆதார வைத்தியசாலை, தியத்தலாவை / பண்டாரவளை